REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

இந்தியாவில் தஞ்சம்புக எண்ணிய கோவா கவர்னர்

போர்ச்சுகீசியப் பகுதியான டாமன் கவர்னர் காப்டன் மகல்சேஸ் கொர்ரியா, அங்கிருந்து தப்பி இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகத் திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால், எவ்வாறோ அத்திட்டம் வெளியாகிவிட்டதென்றும், அதன்பேரில் கவர்னர் தப்பித்துக்கொள்வதற்கு முயன்றால் அவரைச் சுட்டுவிடுமாறு இராணுவத் தலைவர் காப்டன் ரொம்பா உத்திரவிட்டதாகவும் கூறப்படுகிறது.

டாமன் பகுதிகளில் விடுதலை இயக்கமும், கிளர்ச்சியும் வலுப்பெற்று வருவது கண்டு பீதியுற்ற கவர்னர் ஏற்கனவே தமது மனைவியையும், சொத்துக்களையும் லிஸ்பனுக்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

மலர் 3] சென்னை: ஆனி 3உ வெள்ளி (17—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 4உ சனி (18—6—55) [இதழ்

பஞ்சாப் மந்திரி சபையில் பிளவு

கெய்ரோன் கும்பல்-சச்சார் கும்பல் எனப் பிரிவினை

அகாலி கிளர்ச்சியை ஒடுக்குவதில் கருத்து வேற்றுமை

காங்கிரஸ் தலைவர் கூற்று பொய்த்துவிட்டது!

சாந்திகார், ஜூன் 16—

"கிளர்ச்சி செய்யும் அகாலியரை வளரவிட்டுக்கொண்டிருப்பதில் பொருளே இல்லை; இவ்வாறு கூறுவதற்காக என்மீது குறை கூறப்படுமானால் நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை.

"அகாலியர் கிளர்ச்சியினால் உருவாகியுள்ள நெருக்கடியான சூழ்நிலைக்கு அரசாங்கத்தின் 'வெறும் மடமையே' பெரிதும் காரணமாகும்.

"அகாலியர் உரிமைக் கிளர்ச்சியை உடனடியாக ஒழித்துக்கட்டாமல் அரசாங்கம் வளரவிட்டுக் கொண்டு இருக்கிறது."

—இவ்வாறு, ஜலந்தரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில், அமைச்சர் கெய்ரோன், அரசாங்கத்தின் தாராளபுத்தியின் காரணமாகத்தான், அகாலியர் கிளர்ச்சி வலுப்பெற்று விரிந்து வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அகாலியர் பிரச்சினையில், பீம்சேன் சச்சார் — ஜெகத்நாரயண் கும்பலுக்கும், பிரதாப் சிங்—கெய்ரோன் கும்பலுக்கும் மனவேறுபாடு இருக்கிறது என்ற நம்பிக்கை, கெய்ரோன் பேச்சினால் மேலும் ஆக்கம் பெற்றிருக்கிறது.

மாநில காங்கிரஸ் குழுவின் அலுவலகம் ஜலந்தரில் இருந்தும் கூட, ஜலந்தர் நகராட்சித் தேர்தல்களில் காங்கிரஸ் முறியடிக்கப்பட்டுப் போனதற்கு, அமைச்சர்களிடை இருந்துவரும் இந்த கோஷ்டித் தகராறுதான் காரணம் என்று நம்பப்படுகிறது. இதுபற்றி காங்கிரஸ் தலைவரான குருமுக்சிங் முசாபீர், தோல்விக்கான காரணத்தைக் கண்டறிய ஒரு ஆய்வுக் குழுவையும் நியமித்துள்ளார்.

எந்தவிதக் கொள்கை விஷயமாகவும் பஞ்சாப் மந்திரிகளிடை சச்சரவு கிடையாது என காங்கிரஸ் தலைவர் தேபர் அறிவித்த ஒரு வாரத்திற்குள், மேற்படி பூசல் பஞ்சாப் மந்திரிகளிடை வெளிப்படையாகக் கிளம்பி இருக்கிறது.

★

'எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்'

தாய்லாந்து போலீசாருக்கு சர்க்கார் உத்தரவு

"தாய்லாந்து போலீசார் சட்டப்படியோ அல்லது கள்ளத்தனமாகவோ ஒரே ஒரு மனைவிதான் வைத்துக்கொள்ள வேண்டும்" என சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

"ஒருதார மணத்திற்கு போலீசார் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்," என்று இலாக்கா உத்தரவு கூறுகிறது.

எதிர்காலத்தில் திருமணம் செய்து கொள்வதோ அல்லது மணவிலக்கு செய்வதோ—இரண்டிற்கும் தங்களின் உயர் அதிகாரிகளின் முன் அனுமதி பெற வேண்டும்.

தாய்லாந்து சட்டம், 'ஒரு மனைவியும், குழந்தைகளும் பெற்றிருக்கலாம்' எனக் கூறுகிறது; ஆனால் 'முதல் மனைவி அனுமதித்தால் ஒருவர், வேறு இளம் மனைவிகளும் குழந்தைகளும் பெற்றிருப்பதில் தவறில்லை' எனவும் கூறுகிறதாம்!

தடையை மீறி நிலத்தில் நுழைந்த நிலப்பிரபுக்கள்!

போலீசாரால் நையப்புடைக்கப்பட்டனர்!

போலீசார் மீது கூட்டத்தினர் கல் வீச்சு

ஜெய்பூர், ஜூன் 16—

ஜெய்பூரிலுள்ள நிலச் சுவான்கள் சங்கம் ஆரம்பித்துள்ள கிளர்ச்சியின் 11-வது நாள் ஆர்ப்பாட்டத்தின்போது 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

அங்கு விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை மீறி ஊர்வலம் கிளம்ப முயற்சித்துக் கொண்டிருந்த மக்கள் திரளைக் கலைக்க போலீசார் இலேசாகத் தடியடிப் பிரயோகம் நடத்தியதாகவும், அதன் விளைவாக 6 பேர் இலேசாகக் காயம்பட்டனர் என்றும், மக்கள் கூட்டம், போலீசார்மீது கற்களை வீசியெறிந்ததின் விளைவாக இரண்டு போலீஸ் அதிகாரிகளும் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும் காயம்பட்டனர் என்றும் அச்செய்தி விவரம் மேலும் தெரிவிக்கிறது.

இராஜஸ்தான் நிலச்சுவான்கள் சங்கத்தின் தலைவரான தாகுர் மாகன்சிங் என்பவரை, அவரது வீட்டில் போலீசார், தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைது செய்தனர் எனத் தெரிகிறது.

ரஷ்யாவில் பண்டிதர்

டாஸ்சென்டிலிருந்து 200 கல் தொலைவிலுள்ள உஸ்பெக்கிஸ்தானிலுள்ள முக்கிய பெரிய நகரான சாமர்க்கண்டில், இந்தியப் பிரதமர் நேரு 4 மணி நேரம் தங்கினார் எனத் தெரிகிறது.

இந்த சாமர்க்கண்ட் நகரம் சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

உஸ்பெக்கின் முன்னைய மன்னரான டிமூரின் கல்லறையையும், அவருக்கு என கட்டப்பட்ட நினைவுத் தூணையும், அவரது பேரனின் அரண்மனை, புராதன வானிலை ஆராய்ச்சிக்கூடம் ஆகியவைகளையும் நேரு சுற்றிப் பார்த்திருக்கிறார்.

சாமர்க்கண்டில் உள்ள முக்கிய காட்சிகள் அனைத்தையும் கண்டுகளித்த பின்னர் மீண்டும் டாஸ்சென்ட் திரும்பி, அங்குள்ள சில கூட்டுப் பண்ணைகளையும், துணி ஆலைகளையும் அவர் பார்வையிட்டிருக்கிறார்.

அல்டெய்ராய்க்குப் பயணம்

டாஸ்சென்டில் பார்வையிடவேண்டிய எல்லாவற்றையும் பார்த்து முடித்த பின்னர், தெற்கு ரஷ்யாவிலுள்ள அல்டெய்ராய்க்கு அவர் பயணமானார் எனச் செய்திக் குறிப்புகள் அறிவிக்கின்றன.

'அகாலி தளக் கிளர்ச்சி தனி நாடு கோரிக்கையின் அறிகுறியே!'

கிளர்ச்சியை ஒடுக்க இந்திய சர்க்கார் முன்வர வேண்டுமாம்!

'மகா பஞ்சாப்' முன்னணியின் அதிர்ச்சி!

ஹரியானா, ஜூன் 16—

"இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையில் ஒரு 'அகாலிஸ்தான்' அமைப்பதற்கு அறிகுறிதான், இப்போது அகாலிதளத்தவர் நடத்திவரும் கிளர்ச்சியாகும்,"

என்று மகாபஞ்சாப் மாநிலம் அமைக்கக் கோரும் முன்னணியினர் கூறியிருக்கின்றனராம்.

"அகாலிகள் பாகிஸ்தானில் ஒரு சிக்கியப் பகுதியும், இந்தியாவில் பஞ்சாப் மொழி பேசும் மாநிலமும் கோருகின்றனர்,"

என்று, அந்த முன்னணியின் செயற்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் கூறுகிறது.

"அகாலிதளத்தவர் மேற்கொண்டுள்ள வெறுக்கத்தக்க நடவடிக்கைகளை, அவை பஞ்சாப் சர்க்காரின் சக்திக்கு மீறிவிட்டனவாகியிருப்பதால், இந்திய சர்க்கார், அதைத் தடுக்க முன்வர வேண்டும்,"

என்றும் தீர்மானம் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

மேலும், இப்போதுள்ள சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுவையும் கலைத்துவிட வேண்டும் என்றும் மகாபஞ்சாப் முன்னணியின் செயற்குழுத் தீர்மானம் கூறுகிறது.

பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் முதலிய மாநிலங்களை உள்ளடக்கிய மகாபஞ்சாப் மாநிலம் கோருகின்றனர், இவர்கள்!

கிளர்ச்சியை முறியடிப்பதற்கு சதி!

காங்கிரசாரின் வீண்வம்பு

அமிர்தசரஸ், ஜூன் 16—

அகாலிதளத்தவர் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக நடத்தும் உரிமைக் கிளர்ச்சிக்கு எதிராக காங்கிரஸ் சார்புடைய சீக்கியர்கள் ஒன்று திரண்டு, கிளர்ச்சியில் ஈடுபடும் அகாலிதளத்தவர் 'ஆட்சேபனைக்குரிய' குரல் எழுப்புவதை அமைதியாக தடுத்து நிறுத்துவது என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பஞ்சாப், பெப்சு ஆகிய மாநிலங்களிலிருந்து சுமார் 2,000 காங்கிரஸ் சார்புடைய சீக்கியர்கள், சிரோமணி கால்சா தளக் கூட்டமொன்றில் கலந்துகொண்டனர்.

அவர்கள், இப்போது அகாலிதளத்தவர் நடத்தும் கிளர்ச்சியை முறியடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள செயற் குழுவிற்கு அதிகாரம் வழங்கியுள்ளனர்.

உணவு உற்பத்திக்கு மத்திய சர்க்கார் உதவி

ரூ. 58,58,000 சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கும்?

உணவு உற்பத்தித் திட்டத்திற்காக, மத்திய சர்க்கார், சென்னை மாநிலத்திற்கு ரூ. 58,58,000 - அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆகாயப் பரப்பில் காந்தக் கோளாறு?

ஒலிபரப்புகள் பாதிக்கப்படுமாம்

இத்திங்கள் 20-ந் தேதி ஏற்பட இருக்கிற சூரிய கிரகணத்தையொட்டி நான்கைந்து நாட்கள் ஆகாயப் பரப்பில் காந்தக் கோளாறுகள் ஏற்படலாமென்றும், அவ்வாறு ஏற்பட்டால் வானொலி ஒலிபரப்புகள் ஓரளவு பாதிக்கப்படக் கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

அவர் கூறுகிறார்!

ஏறத்தாழ $6\frac{1}{4}$ கோடி மக்கள் வசிக்கும் ஒரு லட்சம் கிராமங்களில் சமுதாய நலத் திட்டங்கள் அமுல் நடத்தப்படுவதாக சமுதாயத்திட்ட நிர்வாகி எஸ் கே. டே கூறியிருக்கிறார்.

சிங்கப்பூர் வேலை நிறுத்தம்

பல லட்சம் டாலர்கள் நஷ்டமாம்!

சிங்கப்பூர், ஜூன் 16—

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வரும் சிங்கப்பூர் தொழிலாளர் பொது வேலை நிறுத்தத்தின் விளைவாக காலனியின் தொழில்களுக்கு சுமார் 10 லட்சம் டாலரும், தொழிலாளர்களுக்கு சுமார் 3 லட்சம் டாலரும் நஷ்டம் எனத் தெரியவருகிறது.

போக்குவரத்து வசதிகள் நின்று போயிருப்பதின் விளைவாக தொழிலாளர்களும், மாணவர்களும் மிக அவதியுறுகின்றனர் என்றும், அவர்களுக்காக, சர்க்கார் இராணுவப் பாதுகாப்புடன் 234 லாரிகளை ஓட்டி வருவதாகவும் தெரிகிறது.

கார் ஒன்று எரிக்கப்படுவதற்காகச் செய்யப்பட்ட 'சதி' முறிக்கப்பட்டு விட்டதாம்; இம்மாதிரிச் சம்பவம், 21-வது முறையாக நடைபெற்றதாம்.

முதன் மந்திரியான டேவிட் மார்ஷல் ஐந்து தொழிற் சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார் என்றும், கைது செய்யப்பட்டுள்ள ஆறு தொழிலாளர், மாணவர் தலைவர்கள் நியாயமான விசாரணை செய்யப்படுவர் என்று கூறியதாகவும் தெரிகிறது.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு பலருடைய ஆதரவும் இருந்தபோதிலும், எதிர்ப்பும் இல்லாமலில்லை என்று கூறப்படுகிறது.

தங்கள் தலைவர்கள் விடுதலை செய்யப்படாமல், தாங்கள் வேலை நிறுத்தத்தை கைவிட முடியாதென தொழிலாளர் கூறியிருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—6—'55 வெள்ளி

யாருக்குப் பாதுகாப்பு?

மனிதனை மனிதன் இழிவுபடுத்துவது, மிருகத்திலும் கேவலமாக மதித்து நடத்துவது கொடுமை—கூடாது—அறவே கூடாது.

பிறப்பினுலேயே ஒருவன் உயர்ந்தவன், மற்ருெருவன் தாழ்ந்தவன் எனப் பேதப்படுத்திப் பேசுவது கயமைத்தனம்—கொலையினும்கொடிய கொடுஞ் செயல்.

அவன் உயர்ந்தவன்—நான் தாழ்ந்தவன் எனத் தனக்குத் தானே ஒருவன் எண்ணிக் கொள்ளுவது அறியாமை—பேதமை—உடனடியாக அகற்றப்பட வேண்டியது.

இந்த நாசக் கருத்து நாட்டு முன்னேற்றத்திற்கும், மக்கள் நல்வாழ்விற்கும், கூட்டுறவிற்கும் கேட்டினைப் பயக்கக்கூடியன. அனுபவம் இவ்வுண்மையைத்தான் வலியுறுத்துகிறது.

பிறப்பிலே உயர்வு-தாழ்வு பேசும் பித்தலாட்டத்தை உருவாக்கி வளர்த்து வருவது இந்து மதமாகும்.

வேறு மதங்களில், இந்தக் கொடுமை, வேறு எந்த உருவிலும் இருக்கவில்லை—ஒப்புக்கொள்ளப்படவுமில்லை.

இந்து மத சாஸ்திரம், இதிகாசம், புராணம் ஆகிய ஏடுகள் அனைத்தும், மேற்படி நச்சுக் கருத்தைக் கட்டிக் காக்கும் கோட்பாடுகளை ஏராளமாகக் கொண்டுள்ளன.

உடலுழைப்பும், அறிவுப் பணியும் புரியாமலே பிறரிடம் செல்வாக்கும், பல்லோரிடம் பாராட்டும், புகழும், நல்வாழ்வும் பெற, தந்திரமாக நிலைநாட்டிவிட்டனர்—அந்த நாசக் கருத்தை; அப்பாவி மக்கள் நம்பிக்கை மோசம் போயினர்; தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக்கொண்டு வாழ ஒப்பினர்—வாழ்ந்துவரவும் ஆயினர்.

மேற்குறிப்பிட்ட நாசக் கருத்தை, 'சனாதனம்' என்றனர்; 'வருணாச்சிரம ஏற்பாடு' என்றனர். வைகுண்டத்திற்குத் திறவுகோல்—கைலாசத்திற்கு நுழைவு வாயில்—மோட்சத்திற்கு முடிந்த மார்க்கம்—என, நயவஞ்சகர்கள், நாட்டு மக்களை ஏமாற்ற ஏற்பாடு செய்துவிட்டனர்.

காலம் மாறிற்று; கருத்துப் புரட்சி முகம் காட்டிற்று; நயவஞ்சகர்கள் நடுக்கம் கொண்டனர்; ஆதிக்கம் சரிவது கண்டு சீற்றம் கொண்டனர்!

'பிறப்பினால் உயர்வு-தாழ்வு கூடாது; மக்கள் அனைவரும் சமம்'—இப்படிப் பேசுவோர் வேத நிந்தகர் - சாஸ்திர சம்பிரதாய விரோதிகள் - நாஸ்திகர்கள்—என, நாசகாலர்கள், மிக மிகத் துணிவுடன் பேசுகின்றனர்.

பழமைப் பிடியில் சிக்கி, இன்னமும் மயக்கம் தெளியாது கிடந்துழலும் பெரும்பாலான மக்களோ, தங்களைப் பிறவி அடிமைகள் என ஒப்புக்கொள்வதிலே மகிழ்கின்றனர்—பூரிப்படைகின்றனர்!

இப்பெரும்பலத்தைத் தங் கருத்து பக்கபலமாகக் கொண்டு, சமத்துவ வாதிகள் மீது, சமரச போதகர்கள் மேல், சீறுகின்றனர்—தெளிவு பெருத மக்களை ஏவுகின்றனர், அந்த நயவஞ்சகர்!

மக்கள் அறியாமையை அகற்றி, அனைவரும் சமம், ஒத்தநிலையினர் என்றப் பெருநெறியைப் பிரசாரம் செய்ய வேண்டிய படித்தவர்கள், மக்களிடம் காணப்பெறும் பேதாபேதத்தை வளர்க்க, மேலும் அதை வலிவுடையதாகச் செய்ய, எவரும் கேட்காத நிலையில் வெளிப்படையாகவும், முணுமுணுக்கும்போது மறைமுகமாகவும் பேசித்திரிகின்றனர்—பாடுபட்டு வருகின்றனர்.

மக்களிடம் வேர் விட்டிருக்கும் பேதாபேத உணர்வை, உயர்வு-தாழ்வு எனும் கருத்துக் குருட்டுத்தனத்தை, தங்கள் ஆதிக்கக் காப்புக்கும் பாராட்டுதலுக்கும், புகழுக்கும் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிற படித்தக் கூட்டத்தை, இங்கு தவிர, உலகில் வேறு எங்கும் காண முடியாது.

இந்தச் சுயநல சதிக்கு, ஆண்டவன் அருள் நெறி, கண்ணன் காட்டிய பாதை எனப் பிதற்றும் போக்கும், இங்கு நீங்கலாக, வேறு நாடுகளில் அறவே கிடையாது.

மற்ற நாடுகளில் உள்ள படித்தவர்கள், பகுத்தறிவை விதைத்திருக்கிறார்கள்—புத்தறிவை வளர்த்திருக்கிறார்கள் - இயற்கையின் உண்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், இங்குள்ள படித்தவர்களோ, அக்கிரமத்திற்கு அருமபொருள் கூறி, அரண் அமைத்திருக்கிறார்கள் — அறியாமைக்குத் தக் கருத்துரை காட்டி வேலிபோட்டிருக்கிறார்கள்—அடிமை நிலைக்கு தத்துவார்த்தம் செப்பி வரம்பு கட்டி இருக்கிறார்கள்.

படித்த கூட்டத்தில் சிறு பகுதி, பெற்ற—பெற்று வரும் சிறப்பும் புகழும், சிறப்பு வாழ்வும், பெரும்பான்மையான மக்களிடம் வேரூன்றிக் கிடக்கும் பிறப்பின் உயர்வு-தாழ்வு நம்பிக்கையிலும், மடமையிலும் இணைந்து கிடப்பதால், அதைப் பட்டுப் போகவிடாமல் பாதுகாத்து வருவதில் அக்கரையும், அதை அழிக்கப் பாடுபடுவோரிடம் பகையும் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் படித்த அச்சிறு கூட்டம் இருந்து வருகிறது.

மக்களின் அறியாமை அகற்றப்பட்டால், பேதமை போக்கப்பட்டால், ஜாதிப் பாகுபாடு களையப்பட்டால், தங்களுடைய ஆதிக்கத்திற்கு அழிவு ஏற்படுமே—நல்வாழ்விற்கு நாசம் சம்பவிக்குமே என, அந்தப் படித்த சிறு கூட்டம் சஞ்சலப்படுகிறது— சீர்திருத்தக்காரர்களுக்கு எதிராகச் சல்லடம் கட்டுகிறது! அவர்கள் போக்கு ஆதிக்க மனப்பேருக்கு!

அவர்கள் மனமாற்றம் பெற, அவர்களுக்கு ஆதிக்கத்தைத் தேடித்தந்த—தேடித்தர உதவியாக இருந்த—இப்பொழுதும் இருந்துவரும், வாய்ப்புகள் அனைத்தையும் அழித்தாக வேண்டும்; அல்லது மாற்ற அமைத்துப் பொதுவாக்க வேண்டும்.

அறிவுத்துறை பொதுவென்ற ஏற்பாடு வேண்டும்.

தத்துவ விளக்கம் தகர்க்கப்பட்டு, அந்த இடத்தில் புது தத்துவம் புகுத்தப்படல் வேண்டும்.

ஆலயத்துள்ளே உள்ள ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, ஆலயம் மக்கள் அனைவருக்கும் பொதுவெனச் சட்டப்படி ஏற்படுத்திவிட வேண்டும்.

எவ்வளவு அக்கிரமக்காரனுக இருந்தாலும், சமூக விரோதியாக இருந்தாலும், அவனை சட்டப்படிதான் தண்டிக்க வேண்டுமேயல்லாது, அவனை சாதாரண மக்கள் தண்டித்துவிடலாம் என்று சட்ட ஏற்பாடு கிடையாது; அப்போக்குக் காட்டுமிராண்டிப் போக்கு; நாகரிக மக்களாட்சிக்கு அப்போக்கு முரண்பட்டது.

ஆலயங்களில் ஒரு சிறு கூட்டம் ஆதிக்கம் வகிப்பது, அதற்கு செல்லரித்துப்போன ஆகம சாஸ்திரங்களிலிருந்து ஆதாரம் காட்டுவது, அந்த அவமானத்தை — ஆதிக்கத்தைச் சட்டத்தால் மாற்றக் கூடாது என ஒருவர், அதிலும் படித்தவர், காடு செல்ல வேண்டிய கிழப்பருவத்தைப் பெற்றுள்ளவர், பேசுவது என்றால், அது யாருடைய பாதுகாப்புக்காக எனக் கேட்க வேண்டியது நமது கடமையாகிறது.

சட்டம் செயல்படுத்தப்படும் நேரத்திலும், 'சட்டங் கூடாது' என வேறு யாராவது விஷயம் அறியாதவர் கூறியிருந்தால், 'அது அறியாமையின் விளைவு' என நாம் கவலையற்று இருந்துவிடலாம்; ஆனால், கூறுபவரோ ஆச்சாரியார்; பெரிய குற்றத் துறை வழக்கறிஞராக இருந்து புகழும் - பொருளும் பெற்றுள்ளவர்; பெரும பதவியிலே இருந்து ஓய்வு பெற்றுள்ளவர்; அக்குணாளர் கூறுகிறார்—'கோயில் நுழைவுக்கு சட்டம் கூடாது; உயர் ஜாதிக்காரர்களின் மனத்தை மாற்ற வேண்டும்'—என்று!

'அவர் யாருக்குப் பாதுகாப்புத் தேடுகிறார்,'—எனக் கேட்பதுடன் இன்று நிறுத்துகிறோம்.

சவ்வரிசித் தொழிலில் நெருக்கடியா?

1 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்

சேலத்திலுள்ள சவ்வரிசித் தொழில் இப்போது பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி இருப்பதாக சேலம் கூட்டுறவு இயக்கத்தின் நிபுணரும், சென்னை மாநில பொருளாதார இலாகாவில் பணியாற்றியவருமான எம். ஜனார்தனம் தெரிவித்திருக்கிறார்.

இராசிபுரம், திருச்செங்கோடு, சேலம் ஆகிய இடங்களில் நடைபெறும் இத்தொழிலில் சுமார் 1 00 000 தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர் என்றும், அவர்களிலும் பெரும்பான்மையினர் பெண் தொழிலாளர்கள் என்றும், அவர்கள் தினம் ஒன்றுக்கு இத்தொழிலின் மூலம் சராசரி ரூ. 1 சம்பாதிப்பதாகவும் கூறப்படுகிறது.

கட்டுமரத்திற்குப் பதில் மோட்டார் படகு?

கட்டுமரத்திற்குப் பதிலாக அலை மீது மிதந்து வந்து கரை சேருகின்ற மோட்டார் படகை தக்கபடி செய்ய சென்னை சர்க்கார் மீன் இலாகாவினர் ஆராய்ச்சிகள் நடத்திவருகின்றனரெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பக்தவத்சலனார் தரும் அபயம்

திருச்சி, ஜூன் 14—

"நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி விவசாயிகள் பயப்பட வேண்டியதில்லை. நிலச் சீர்திருத்தச் சட்டத்தினுல் 8 பேரில் 7 பேர் பாதிக்கப்படமாட்டார்கள்; அத்துடன் நிலமும் இப்போது உள்ளபடியே இருக்கும்; இதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்புதான் முக்கியமான தேவையாகும்; இது இருந்தால் எந்த நிலைமையையும் சமாளிக்கலாம்; உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் விவசாயத் தொழிலை நடத்தவேண்டும்."

இவ்வாறு, மாநில விவசாய, தொழில் அமைச்சர் பக்தவத்சலம், ஆடுதுறை விவசாயப் பண்ணையில் நடைபெற்ற 'விவசாயிகள் தின'க் கொண்டாட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'நாங்களும் ஏற்போம்'

மதுவிலக்குபற்றி இராணுவத்தினர்

நாடு முழுமையிலுமாக மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டால், அதனை ஆயுதப் படையினரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றனரென நான்கு இராணுவ அதிகாரிகள் மதுவிலக்குக் குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றனராம்.

தங்களுடைய இந்த 'முடிவை' குழுவினரிடம் தெரிவிப்பதற்கு முன்னர் அந்த நான்கு அதிகாரிகளும், கப்பற் படை, விமானப் படை, காலாட்படை ஆகிய முப்படைகளின் தலைவர்களையும், தற்காப்பு அமைச்சரையும் இதுபற்றிக் கலந்தாலோசித்துக் கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலஞ்சம் வாங்கிய

அதிகாரிகள் மீது நடவடிக்கை

சென்னை மாநில மராமத்து இலாகாவைச் சேர்ந்த நிர்வாக எஞ்சினீயர் ஒருவரும், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருமாக இரண்டு சர்க்கார் அதிகாரிகள் இலஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கட்டாயமாக 'ரிடையர்' ஆக உத்திரவிடப்பட்டிருக்கின்றனர்.

இவர்களைத் தவிர, இதே குற்றம் புரிந்ததற்காக ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும், மதுவிலக்கு இலாகாவைச் சேர்ந்த 'கார்டு' ஒருவரும், விவசாய இலாகாவைச் சேர்ந்த ஆயில் எஞ்சின் ஓட்டுபவர் ஒருவரும் வேலையினின்றும் நீக்கப்பட்டுள்ளனராம்.

கூட்டுத்தயாரிப்பே சிறந்ததாம்!

வாஷிங்டன், ஜூன் 14—

"நடுநிலைமைக் கொள்கை எந்த விதத்திலும் ஜெர்மனிக்குப் பொருந்தாதென்பதும, ஜெர்மனியின் சுதந்திரத்தைக் கூட்டுத் தற்காப்பு ஏற்பாடுகள் மட்டுமேதான் பாதுகாக்குமென்பதும் எங்கள் இருவரது கருத்தாகும்; இந்தக் கருத்து இந்தக் கூட்டறிக்கை மூலம் உறுதி செய்யப்படுகிறது,"

என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவரும், மேற்கு ஜெர்மன் பிரதமர் அடினுரும் 'வெள்ளை மாளிகை'யில் சந்தித்துப் பேசி வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் மேற்கத்திய நாடுகளுடன் ஒரு ஏற்பாட்டிற்கு வந்தான பிறகு, சோவியத் ரஷ்யா தன்னுடைய சாதனங்களை—அதிலும் முக்கியமாக இராணுவ பலத்தை பசிபிக் மண்டலத்தில் உபயோகிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது," என்று மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் அடினுர் இக்கூட்டறிக்கை வெளியிட்ட பின்னர் அறிவித்திருக்கிறார்.

துவக்கத்திலேயே எதிர்ப்பா?

கராச்சி, ஜூன் 16—

பாகிஸ்தானில் புதிதாக அமைந்துள்ள அரசியல் நிர்ணய சபையில் முஸ்லீம் லீகிற்கு எதிர்ப்பு அதிகப்படலாம் என்று கருதப்படுகின்றது.

கட்சியில் அதிருப்தி கொண்டுள்ள முஸ்லீம் லீகர்களை எதிர்க் கட்சிகளும்—குறிப்பாக சுஹரவர்த்தி தலைமையில் உள்ள அவாமி முஸ்லீம் லீகினர் ஏற்றுக் கொண்டு புதிய அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற இருக்கும் முதல் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியுடன் கடுமையாகப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு வங்கத்தில் சென்ற பொதுத் தேர்தல் நடைபெற்ற போது முஸ்லீம் லீக் படுதோல்வி கண்டு மண்கவ்வியது தெரிந்ததே.

★

'முடிவு'க்கு எதிர்ப்பு!

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு, முஸ்லீம் லீக் சார்பில் தேர்தலில் நிற்க பஞ்சாப் முன்னாள் முதலமைச்சர் நூனுக்கும், அவருடைய குழுவினருக்கும் பாகிஸ்தான் மத்திய பாராளுமன்றக் குழு அனுமதிதர மறுத்திருந்தது.

ஆனால், மேற்படிக் குழுவின் இந்த முடிவை மீறி தாம் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் போட்டியிடப்போவதாக நூன் தெரிவித்திருக்கிறார். நூன் மந்திரி சபை அண்மையில் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டது நினைவிருக்கலாம் ஆனால் அவரது மந்திரிசபை கலைக்கப்பட்டபோதிலும், நூனே இப்போதும் பஞ்சாப் முஸ்லீம் லீகின் தலைவராகவும் லீக் அசெம்பிளிக் கட்சித் தலைவராகவும் இருந்துவருகிறார்.

★

புதிய கட்சி உருவாகும்?

முஸ்லீம் லீகிலிருந்து இராஜினாமாச் செய்துகொண்ட முன்னாள் எல்லைப்புற மாநில முதலமைச்சர் கயூம்கான் புதிய கட்சி ஒன்றை அமைக்கப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

அக்கட்சியின் சார்பில் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் போட்டியிடப்படுமெனவும் அவர் கூறியிருக்கிறார்.

'தோல்விக்கு முயற்சியா?'

நால்வர் மாநாடு பற்றி ரஷ்ய இதழ் கருத்து

மாஸ்கோ, ஜூன் 15—

"அடுத்து வருகிற ஜூலைத் திங்களில் ஜினிவாவில் நடைபெற இருக்கும் நான்கு வல்லரசு நாடுகளின் அதிபர்கள் மாநாட்டில் விவாதத்திற்குக் கொண்டுவர இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ள பிரச்சினைகளைக் கவனிக்கையில், நான்கு வல்லரசு அதிபர்களின் பேச்சுவார்த்தைகள் முறிந்து போகச் செய்ய அமெரிக்கா தன்னால் இயன்ற அளவு முயற்சி மேற்கொள்ளும் எனத் தெரிகிறது," என்று சோவியத் இதழ் 'பிராவ்டா' குறிப்பிட்டிருக்கிறதாம்.

மாஸ்கோ வானொலியும் மேற்படி மாநாடு பற்றி ஒலி பரப்புகையில் "சோவியத் யூனியனுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் 'பலத்தைக் காட்டும் கொள்கை' பலிக்காது; இந்தக் கொள்கையுடன் மாநாட்டுப் பேச்சுவார்த்தைகளுக்கு வருபவர்கள் உண்மையிலேயே சமரசப் பேச்சுக்களை விரும்பாதவர்கள்; அதிகார ஆதிக்க அரசியலை வற்புறுத்துவோர் அனைவரும் சர்வதேச நெருக்கடி நீடிக்க வேண்டுமென்று விரும்புவோரேயாகும்; அவர்கள் ஆயுதப் போட்டியை வலியுறுத்துபவர்களாவர்," என்று கூறியிருக்கிறது.

சுடுவதற்கு மறுத்த சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்?

இராணுவ மன்றம் அளித்த தீர்ப்பின் விளைவு?

சென்ற வாரக் கடைசியில் ஆப்பிரிக்க சிப்பாய்கள், போர்ச்சுகீசிய அதிகாரிகளுக்கு எதிராகப் புரட்சி செய்ததாகவும், அதன் விளைவாக 20 ஆப்பிரிக்கச் சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் படுகொலைகள் அனைத்தும் டாமன் நகரின் தென் பகுதியிலேயே நடைபெற்றனவென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பகுதிகளுக்கு டாமனிலிருந்து வந்துள்ள சில அகதிகள், அந்த ஆப்பிரிக்க சிப்பாய்கள் அனைவரும் இராக்காலத்தில் கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டு சுடப்பட்டனர் என்றும், அவர்களின் சவங்களுடன் கற்களைக் கட்டி, அவை, கடலில் எறியப்பட்டன என்றும் அறிவித்துள்ளனர்.

கோவா கிளர்ச்சிக்காரர்களைச் சுட முடியாதென ஆப்பிரிக்கச் சிப்பாய்கள் போர்ச்சுகீசிய சிப்பாய்களிடம் தெரிவித்ததாகவும், இதையொட்டி அவர்களிடையே ஏற்பட்ட கலவரத்தின் விளைவாக இரண்டு போர்ச்சுகீசியர் கொல்லப்பட்டதாகவும், 3 பேர் காயமுற்றதாகவும் தெரிகிறது.

கலகம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மேற்கூறப்பட்ட 20 ஆப்பிரிக்கச் சிப்பாய்களையும் விசாரித்த இராணுவ நீதி மன்றம் அவர்களனைவருக்கும் விதித்த மரண தண்டனையின்படியே சுட்டுக் கொல்லப்பட்டனராம்.

20 ஆண்டு காலத்திற்கு அரசியல்உரிமை பறிமுதல்

கார்வார்—

சென்ற ஜனவரி திங்களில், 3 பெண்கள் உட்பட கைது செய்யப்பட்ட 12 கோவா தொண்டர்களில் 6 பேருக்குத் தலா 8 ஆண்டு சிறைத் தண்டனை விதித்ததுடன், அவர்களுடைய அரசியல் உரிமைகள் 20 ஆண்டுகளுக்குப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதென்றும், மேலும், 5 ஆண்டு காலத்திற்கு, தினம் ஒன்றுக்கு ரூ 2½ வீதம் அபராதம் கட்டிவர வேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதாம்.

மேலும் 4 தொண்டர்களுக்குத் தலா 4 ஆண்டு சிறைத் தண்டனையுடன், 10 ஆண்டு காலத்திற்கு அவர்களுடைய அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளனவாம். இதே தண்டனை, 3 பெண் தொண்டர்களுக்கும் தரப்பட்டுள்ளதாம்!

அன்னிய வல்லரசின் ஆதரவா?

போர்ச்சுகீசியப் பிரதமர் சலாசரை ஒரு அன்னிய வல்லரசு ஆதரித்து வருகிறது என்றும், அவர் இன்னும் தமது பதவியில் நீடித்திருப்பதற்கு சில உயர்தர இராணுவ அதிகாரிகளின் தயவுதான் காரணமே தவிர மக்களின் ஆதரவு அவருக்குக் கிடையாது என்றும் டாக்டர் கெய்டோண்டே கூறியிருக்கிறார்.

மாநாடு கூடுகிறது

சென்னை, ஜூன் 16—

கோவா விடுதலைப் போராட்டத்தில் அக்கரை கொண்டுள்ள சர்வ கட்சி பாராளுமன்றக் குழுவின் 3-வது தேசீய மாநாடு இத்திங்கள் 25, 26-ந் தேதிகளில் நடைபெறும் என்றும், இம்மாநாட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, ஏ கே. கோபாலன் ஆகியோர் கவனித்து வருகிறார்கள் என்றும் தெரிகிறது.

விபரங்களைக் கேட்கிறார்கள்!

சென்னை மாநிலத்திலுள்ள கோயில்களின் வருடாந்திர உபரி நிதி பற்றிய விவரங்களைக் கேட்க மாநில சர்க்கார் உத்தேசித்துள்ளனராம்.

அத்துடன், அந்த உபரிநிதியை எந்தெந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்தலாம் என்பதுபற்றி அந்தந்தக் கோயில் நிர்வாகிகளின் கருத்துக்களும் கேட்கப்படுமாம்.

மேற்கண்ட தகவல்களனைத்தும் கிடைத்தவுடன், அந்த உபரி நிதியை எப்படிச் செலவிடலாமென்பது பற்றி அற நிலையக் கமிஷனர் 'தற்காலிகமாக' முடிவு செய்து அதனைப் பிரசுரிப்பாராம்.

மாநில மாநாட்டு வரவேற்புக் குழுக் கட்டணம்

★

சென்னையில் நடைபெற்ற பொதுக் குழு முடிவின்படி, திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் கட்டணம் ரூபாய் பத்தும் மே மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கோண்டபடி, பல தோழர்களிடமிருந்தும் இன்று வரையில் வந்து சேரவில்லை. இரண்டு முறை அறிவிப்புக் கார்டுகளும் அனுப்பியாயிற்று. இனி, மூன்றுவது முறையாக அறிவிப்புக் கார்டுகள் அனுப்பி வைக்கும் அவசியமில்லாதபடி., வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூபாய் பத்தும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முகவரிக்கு M.O. மூலம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இராயபுரம், சென்னை-13, 14—6—55 — பொறுப்பாளர், தி. மு. கழகம், தலைமை நிலையம்

தர்காபூரில் நிர்மாணிக்கப்படவிருக்கும் கோக் உலைக்களத்துக்கு, மொத்தம் ரூ 5.5 கோடி செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தூதுவர்கள் அனுப்புவதின் நோக்கம் என்ன?

தமிழர்களின் பாதுகாப்பிற்கு தமிழர்களையே தூதுவராக அனுப்ப வேண்டும்!

"ஒரு தேசத்துக்கு இன்னொரு தேசம் தூதுவரை அனுப்புவதின் நோக்கம் என்ன?

(1) இரண்டு தேசங்களுக்கும் இடையே உள்ள பொது உறவு சுமுகமாக இருக்க ஆவன செய்தல்.

(2) சிறப்பாக அரசியல், பொருளாதார, கலாச்சாரக் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும், அவற்றுள்ளும் சிறப்பாக அந்நாடுகளுக்கிடையே வாணிபத்தைப் பெருக்கவும் ஆவன செய்தல்.

(3) தன் தேசத்து மக்கள் அதிக அளவில் இன்னொரு தேசத்தில் வாழ்ந்தால், அவர்களுடைய நலன்களைப் பாதுகாத்தல்;—

ஒரு தூதுவர் செய்யவேண்டிய வேலைகளில், மேற்கண்ட மூன்றும் மிக முக்கியமானவை.

"மலேயாவைப் பொறுத்தவரையில், இதுவரையில் இங்கு பணியாற்றிய தூதுவர்கள் யாவரும் நம் போற்றுதல்களுக்கு உரியவர்களே; அவர்கள் மீது குறைகள் சொல்ல வேண்டுமென்பது நோக்கமல்ல; இருப்பினும், மலேயாத் தமிழர்கள் 'இங்கு அனுப்பப்படும் தூதுவர்கள் தமிழர்களாகஇருந்தால், தங்களுடைய குறைகளை நன்கு உணர்ந்து, வேண்டியதைத் திறமையாகச் செய்ய முடியும்' என்று நம்புகிறார்கள்; அந்தப்படியே தங்கள் கருத்தையும் வெளியிட்டு இருக்கிறார்கள்.

"தூதுவருக்கு உண்டான முக்கிய மூன்று வேலைகளில் ஒன்று, அயல் தேசத்தில் வாழும் தன் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பை அளித்து, அவர்களுக்கு வேண்டிய நன்மைகளுக்குப் பாடுபடுதல்; அப்படிப் பார்க்கும்போது, மலேயா வாழ் இந்தியர்களில் 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழர்கள்; அவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்கள்; அவர்கள் வசிப்பது, தோட்டங்களுக்கு அருகில்; ஆகவே, முறையான கல்வியைத் தங்கள் குழந்தைகள் பெற முடியாத நிலையை அறிந்து, அவர்கள் மிக வருந்துகிறார்கள். அவர்களுக்கு பல்வேறு இனங்கள் வாழும் இத்தேசத்தில் அரசியல் பாதுகாப்பு வேறு தேவையாக இருக்கிறது.

"ஆகவே மலேயாப் பிரச்சினை, பெரும்பாலும், தமிழர் பிரச்சினையாக மாறிவிடுகிறது; அதனால், தூதுவர்களுக்குரிய முக்கிய மூன்று வேலைகளிலும் - திறமையான தமிழர் ஒருவரையே மலேயா தூதுவராக இந்திய அரசாங்கம் அனுப்பிவிடுமேயானால், அரசாங்கத்தின் வேலையும் செம்மையாக நடைபெறும்; இங்குள்ள தமிழர்களும் மகிழ்ச்சி அடைவார்கள்.

"இதே முறையைத் தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கை, பர்மா, பிஜித் தீவுகள் ஆகிய நாடுகளுக்கு அனுப்பும் தூதுவர்கள் விடயத்திலும் பின்பற்றினால், அங்குள்ள தமிழர்களுக்குக் கதி விமோசனம் ஏற்படலாம்."

—'தமிழ் நாடு'

குடியானவர் உரிமை மசோதா!

பம்பாய் மாநிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது

பம்பாய், ஜூன் 15—

பம்பாய் மாநில சர்க்கார், பம்பாய் மாநிலத்தில் வருகிற 1957 ஏப்ரல் திங்கள் முதல் தேதி 'குடியானவர் தினமா'க இருக்குமென்றும், குடியானவன் என்ற முறையில், நிலச்சுவான்தாரிடமிருந்து, தான் சாகுபடி செய்துவந்த நிலத்தை அக்குடியானவன் தானே வாங்கிவிட்டதாகக் கருதப்படும் என்றும், ஆனால் அந்த நிலத்தைக் குடியானவன் தானுகவே சாகுபடி செய்ய வேண்டுவதுடன் அதற்கு அதிகபட்ச வரம்பும் கட்டப்பட வேண்டுமெனவும் கூறுகின்ற சாகுபடி உரிமை, விவசாய நில சட்டத்திற்கு நகல் மசோதா ஒன்றைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர்.

நில உடைமைக்கு அதிக பட்ச வரம்பு கட்டப்படும் என்றாலும், அந்த 'அதிக பட்ச வரம்பு,' இப்போதைய உடைமையைப் பாதிக்காது என்றும், ஆனால் எதிர்காலத்தில் குடியானவனோ அல்லது நிலச்சுவானோ அதிக பட்சம் 48 ஏகர் பாசன வசதி இல்லாத நிலம், அல்லது, சில காலங்களில் மட்டும் பாசன வசதியுள்ள 24-ஏகர் நெல்வயல், எல்லா காலங்களிலுமே பாசன வசதியுள்ள 12 ஏகர் நிலம் மட்டுமேதான் வைத்துக்கொள்ள முடியும் என்றும் அம்மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது.

நாஞ்சில் மாவட்ட தி.மு.கழகதோழர்கட்கு

★

"3—6—55-ல் நடந்த செயற்குழுவின் தீர்மானத்தை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதோடு, நமது குறிக்கோள் வெற்றிபெற ஒவ்வொரு கிளைக் கழகத் தோழர்களும் தங்களால் இயன்ற பொருளுதவியை தந்து உதவ வேண்டுகிறேன்:—

"(1) நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம், மாநில மாநாட்டிற்காகக் கொடுக்க வேண்டிய ரூ. 2000-த்திற்கும் நமது மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக் கழகத் தோழர்களும் 15—6—55-லிருந்து 2 வாரத்திற்குள் குறைந்தது ரூ. 1 வீதம் தங்கள் கிளைக் கழகச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

"(2) மேற்கண்டவாறு பிரித்த தொகை போக மீதித் தொகையைப் பிரிப்பதற்கும் அதற்கு வேண்டிய சகல ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கும் மாநில மாநாட்டு நிதி சேர்ப்பு அமைப்புக்குழு என்றொன்றமைத்து அதற்கான சகல நடவடிக்கைகளுக்குள்ள அதிகாரங்களையும் மாவட்ட செயற்குழு கொடுக்கிறது.

"மாநில மாநாட்டுப் பொருளாளர் அண்ணா அவர்களை இங்கு வருவித்து அவரிடம் நாஞ்சில் மாவட்டம் கொடுக்க வேண்டிய ரூ. 2000-த்தையும் நேரில் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது,"

என்று, நாஞ்சில் மாவட்டச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் அறிவிக்கிறார்.

இறக்குமதிக் கொள்கையில் மாறுதல் இல்லையாம்!

இந்திய சர்க்காரின் அடுத்த 6-மாத இறக்குமதிக் கொள்கையில் விசேடமான மாறுதல்கள் எதுவும் இருக்காது என தெரிய வருகிறது. இன்னும் 10 தினங்களுக்குள், இந்திய சர்க்காரின் அடுத்த ஆறு மாத இறக்குமதிக் கொள்கை வெளியிடப்படுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

97 மணி நேர சைக்கிள் சவாரி

பெங்களூர் பிளாக்பள்ளி மைதானத்தில், மேயர் தீனதயாளன் தலைமையில் கள்ளக்குறிச்சி தோழர் எஸ். நடராசன் 97 மணி நேரம் சைக்கிள் சவாரி செய்தார். அன்னாரைப் பாராட்டி திரு. எம் ஜெயசீலன், பெங்களூர் மாவட்ட தி. மு கழக செயலாளர் பிரான்சிஸ், வி. என். தத்தப்பன் ஆகியோர் பேசினர். தோழர் நடராசனுக்குப் பரிசாக ரூ 750-ம், 12 வெள்ளிக் கப்புகளும் வழங்கப்பட்டன.

சென்னை பெரியமெட்டு கனகராசனார் நினைவு இரவுப் பள்ளி

சென்னை-பெரியமெட்டு ஏகாம்பரக் குமரகுருத் தெருவில் அமைந்துள்ள கனகராசனார் நினைவு இரவுப் பள்ளி மாணவர்களிடையே 12—6—55 காலை 10 மணிக்கு பத்திரிகை படிக்கும் போட்டி நடைபெற்றது. போட்டியின்போது, 'நம் நாடு' தமிழ் இதழை தலை கீழாக வைத்துக் கொண்டு, தவறுகள் எதும் ஏற்படாமல், தடையின்றித் துரிதமாக ஒரு பத்தியைப் படித்து வெற்றி கண்ட மாணவன் ஏ டி. பரமானந்தனுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள எழுதுகோல் அன்பளிப்பாக தரப்பட்டது. (ந-தி.)

கோவை மாவட்டத்தில்

மனோகரன் - சண்முகநாதன் சுற்றுப்பயணம்

கணியூர்: 27-5-55-ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் பல்லடம்-பொன்னுசாமி சிறிது நேரம் பேசிய பின்பு, தோழர் வி. சண்முகநாதன் விவசாய நிலை குறித்து விரிவுரையாற்றினார். பின்னர், நாஞ்சில்-கி. மனோகரன் நீண்டநேரம் கருத்துரை ஆற்றினார்.

கோட்டூர் (மலையாண்டிப் பட்டினம்): 28-5-55-ல் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் பல்லடம்-பொன்னுசாமி சிறிது நேரம் பேசிய பிறகு, தோழர் வி சண்முகநாதன் நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்து பேசிய பின்பு, தோழர் நாஞ்சில்-கி. மனோகரன் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

கோவை (இராமநாதபுரம்): 29—5—55-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் பல்லடம்-பொன்னுசாமி அவர்கள் சிறிது நேரம் பேசிய பிறகு, தோழர் வி. சண்முகநாதன் மாநில மாநாட்டின் அவசியம் குறித்து பேசினார். கடைசியில், தோழர் நாஞ்சில்-கி. மனோகரன் 'தி. மு. கழகமும், இதர அரசியல் கட்சிகளும்' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார்.

சுல்தான்பேட்டை: 30-5-55ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் பல்லடம்-பொன்னுசாமி பேசியபிறகு, தோழர் வி. சண்முகநாதன் திராவிடத்தின் பொருளாதார—அரசியல்—சமூக நிலை குறித்தும், நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் பேசிய பிறகு, நாஞ்சில்-கி மனோகரன் திராவிட விவசாய நிலை குறித்தும், நாட்டுப் பிரிவினை எவ்வளவு இன்றியமையாதது என்பதைப் பற்றியும் பேசினார்.

பெயர் சூட்டல்

கோவை மாவட்டம் மூளையாம் பூண்டி தோழர் கருப்பசாமி அவர்களது பெண் மகவுக்கு, தோழர் கி. மனோகரன் அவர்களால் 'அழகிரியம்மாள்' என்று பெயர் சூட்டப்பட்டது. அது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

திருமணங்கள்

12—6—55 காலை 9 மணியளவில் சென்னை—சூளை கலியாண மேஸ்திரி தோட்டத்தில் தோழர் எம். சோமசுந்தரம் எம் சி. தலைமையில் தோழர் ஆ. பொன்னுசாமி—தோழியர் அன்னகிளி திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், சு. பாலன், கன்னியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

• • •

12—6—55 காலை 9 மணிக்கு, அயனம்பாக்கம் மேல் கிராமத்தில், சுப்பிரமணி இல்லத்தில் தோழர் எஸ். கிருட்டிணன் — தோழியர் எஸ். பத்மாவதி திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் எம். கோபாலன், பொன். கு. கோதண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

சுமார் 3,000 பழைய மூன்றாவது வகுப்பு இரயில் பெட்டிகளில் இதுவரை மொத்தம் சுமார் 30,000 மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. புதிதாகத் தயாரிக்கப்படும் பெட்டிகள் அனைத்திலும், அவைகள் வண்டித் தொடர்களில் இணைக்கப்படுவதற்கு முன்னமேயே, மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுவிடுகின்றன.

தமிழர் உரிமை பெற தமிழ் மொழி முதன்மை பெற வேண்டும்!

'உரிமைவாழ்வா-அடிமைவாழ்வா?' என்பதை நிர்ணயிக்கும் நாள்

" தமிழின் 'தலைவிதி'யை வரையறுக்கச் செல்லும் மாநாட்டு உறுப்பினர்களே! ஜூன் 18 உங்களுக்கொரு சோதனை நாள்! கொண்ட கொள்கையை விடாது, மாற்றார் கூறும் மயக்குமொழிகளில் அகப்படாது, அரசாங்கத்தார் அளிக்கும் நல் வரவேற்பில் மயங்கிக் கருத்தை இழக்காது தமிழுக்கு உரிமை வாழ்வை அளிக்கும் உறுதியான தீர்ப்பை வழங்குங்கள்! குற்றமற்ற ஒருவன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு, நடுவர்களின் தீர்ப்பை நாடி நிற்கும் நிலையில் நாம் உள்ளோம்!"

என்று, பேராசிரியர் இலக்குவனார் அவர்கள், தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறுவதாவது :—

"மொழி உரிமை பெறாத நாடு வேறெவ்வித உரிமைகளைப் பெற்றிருந்தாலும் உரிமை பெற்றதாகக் கருத முடியாது; மொழி உரிமை என்பது என்ன? ஒரு மொழி, அது வழங்கும் அதற்குரிய நாட்டில் எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்று விளங்குவது தான்.

"நம் தமிழ் மொழி இன்று என் நிலையில் உள்ளது? கல்வித் துறையிலும், அரசியல் துறையிலும், சமயத் துறையிலும், வாழ்வியல் துறையிலும், தமிழ் நாட்டில்—தமிழுக்கு முதன்மையில்லையே!

முதன்மை இல்லையென்றால் உரிமையில்லை; உரிமையில்லை என்றால் அடிமை நிலைதானே! தமிழ் மொழி அடிமை நிலையில் இருக்கும் போது தமிழன் உரிமை பெற்றவனாவனா?

தொன்மைவாய்ந்த மொழிக்கு தாழ்வு நிலைமை ஏன்?

"'தமிழ் மொழி தொன்மை வாய்ந்தது; இலக்கிய வளம் நிறைந்தது; இலக்கண வரம்பு உடையது; சொல் வளமிக்கது' என்றெல்லாம் மேடைமீது அழகாகப் பேசுகின்றனர்; ஆனால், செயலில் தமிழைச் சிறுமைப்படுத்துகின்றனர்.

"இலக்கிய வளமும், இலக்கண வரம்பும், சொற் செல்வமும் பெறாத மொழிகளெல்லாம் அரசியலிலும், கல்வித் துறையிலும் முதன்மையிடம் பெற்று தனியாட்சி செலுத்துகின்றன; தமிழோ, எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தும் இன்னும் தாழ்வுற்று கிடக்கிறது.

கொடுமை நீடிக்கக்கூடாது!

"தமிழ் நாட்டில் தமிழே அரசியல் மொழியாகவும், கல்வி பயிற்றுவிக்கும் மொழியாகவும் உடனே ஆக்கப்படல் வேண்டும்.

"கோவைக்குரிசில் அவனாசிலிங்கனார், கல்வி அமைச்சராக இருந்த காலத்தில், உயர்நிலை கல்விக்கூடங்களில் தமிழை முதன் மொழியாகவும், கல்வி பயிற்றுவிக்கும் மொழியாகவும் ஆக்கி, தமிழரின் மாறா நன்றிக்கு உரியவரானார்; அதன் பயனால், உயர்நிலை கல்விக்கூடங்களில் மாணவர்கள் எளிதில் பாடங்களைக் கற்று, கல்வித் துறையில் சிறப்புற்று விளங்குகின்றனர்; அவர்களிடையே சிறந்த பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் தோன்றியுள்ளனர்; ஆனால், அவர்கள் கல்லூரியையடைந்தும் வகுப்பறைகளில் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளைக் கேட்டு, அவற்றின் பொருள் விளங்காது சித்திரப் பாவையின் அத்தகவே அடங்கியுள்ளனர். கலையறிவு பெறச் சென்றவர்கள் சிலைகள் போல் வெளிவருகின்றனர்; இக்கொடுமை மேலும் நீடித்தல் ஆகாது.

'வெறுப்பு'க்கு ஆளாகாதீர்!

"ஜூன் 18-ல் சென்னை கல்வியமைச்சர் அவர்கள் ஒரு மாநாடு கூட்டியுள்ளார்; அம்மாநாட்டில் தமிழ், 'உரிமை பெற்று வாழ்வதா—அடிமையிலிருந்து சாவதா?' என்று ஆராயப்படும்; அம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளோர்களுள் பெரும்பாலோர் சிறந்த தமிழ் மொழிப் பற்றும், தமிழ்

தமிழில் பாடம் போதிக்க......

சென்னை மாநிலத்திலுள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் மொழியில் எல்லா பாடங்களையும் கற்பிக்கும் பிரச்சினை குறித்து விவாதிக்க, 18-ந் தேதியன்று, புது டெல்லியில் கல்வி நிபுணர்கள் மாநாடொன்று நடைபெற இருக்கிறது.

மொழித் தொண்டாற்றும் பெருமையும் உடையவர்கள், கல்வி அமைச்சர் அவர்களும் தமிழுக்கு முதன்மையளிக்க வேண்டுமென்ற கருத்தை இதற்கு முன்பு பல தடவை, பல கூட்டங்களில் வெளியிட்டுள்ளார்கள். ஆதலின், இம்மாநாடு 'கல்லூரிகளில் கல்வி பயிற்றுவிக்கும் மொழியாக, தமிழ் நாட்டில், தமிழ்தான் இருத்தல் வேண்டும்' என்று ஒருமனதாக முடிவு செய்யுமென்பதில் நமக்கு ஐயமில்லை இதற்கு மாறாக முடிவு செய்யப்படுமேல் இம்மாநாட்டினரும், கல்வி அமைச்சரும் 'தமிழ்க் கொலைஞர்கள்' என்ற பெரும் பழிக்கும், தமிழ்மக்களுடைய கடும் வெறுப்பிற்கும் ஆளாவர்.

"தமிழுக்கு சகலவித துறையிலும், அரசியல் துறையிலும் முதன்மையிடமும், உரிமை வாழ்வும் முதலமைச்சர் காமராசர் காலத்தில் கிடைக்குமென்று தமிழ் மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்."

பொதுக்கூட்டங்கள்

18—6—55 இரவு 7 மணிக்கு, கடையநல்லூர் மறுமலர்ச்சி மைதானத்தில், கடையநல்லூர், முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்ற முதல் ஆண்டு விழா தோழர் ப. புகழேந்தி தலைமையில் நடைபெறும். வரவேற்புரை: தோழர் ச. குருசாமி; துவக்குபவர்: தோழர் ஆ. திராவிடமணி; தோழர் ஈ. வெ. கி. சம்பத், மற்றும் பலர் பேசுவர்.

* * *

18—6—55 அன்று, அச்சம் பத்துவில், வ. உ. சி. நினைவுப் படிப்பகத்தின் சார்பில், தோழர் நீ. சனார்த்தனன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். இராமசாமி, சந்தானம் ஆகியோர் பேசுவர்.

* * *

18—6—55 மாலை 6 மணிக்கு, குளேசுவரன்பட்டி (பொள்ளாச்சி) யில், வேலாயுத மன்றத் துவக்க விழா நடைபெறும். தோழர் கோவை செழியன் பேசுவார்.

* * *

18—6—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை—புரசை, பெரியசாலை அன்னதான சமாஜ மண்டபத்தில், சென்னை திருவள்ளுவர் கழகச் சார்பில், 'திருவள்ளுவரும் நெஞ்சும்' என்பது பற்றி திரு. எஸ். இராஜு பேசுவார்.

* * *

18—6—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை இளம்பிறைச் சங்க மண்டபத்தில், தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் திருமதி மார்ஸெல்லா ஹார்டி தலைமையில், 'பிரெஞ்சு இலக்கியம்' என்னும் பொருள் பற்றி திரு. ப. கோதண்டராமன் பேசுவார்.

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் குடந்தைவருகை

18-6-55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் —மாநில மாநாட்டு நிதியளிப்பு நடைபெறும்.

தோழர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்குவார்.

தோழர்கள் என்.எஸ்.இளங்கோ, க. அறிவழகன் மற்றும் பலர் பாராட்டுரையாற்றுவர்.

* * *

நிகழ்ச்சி நிரல்

காலை 6 மணிக்கு: புகைவண்டி நிலையத்தில் பொதுச்செயலாளர் வரவேற்பு.

காலை 8 மணிக்கு: நாகேச்வரன் சன்னதியில் திருமணம்.

காலை 10 மணிக்கு: கொரநாட்டுக் கருப்பூர் ஊராட்சி மன்ற வரவேற்பு; அண்ணா படத் திறப்பு விழா

காலை $10\frac{1}{2}$ மணிக்கு: சத்திரங்கருப்பூர் தி மு. கழக கிளை துவக்க விழா.

காலை 11 மணிக்கு: நகரின் பல பகுதிகளில் கொடியேற்று விழா.

மாலை 3 மணிக்கு: துவரங்குறிச்சி வடக்கு வீதியில் பணியாளர் கூட்டம்.

மாலை 4 மணிக்கு: புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம்.

மாலை 6 மணிக்கு: அரண்மனைத் தோட்டத்தில் பொதுக்கூட்டம்

திருச்சியில்

தி. மு. க. மாநில மாநாட்டு

நிதியளிப்பு விழா

★

பொதுச்செயலாளர் வரவேற்பு

பொதுக்கூட்டம்

19—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஏ. பி. தர்மலிங்கம்

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்
சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்

—திருச்சி மாவட்ட தி.மு.க.

திருச்சி மாவட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

" 19-6-55 அன்று, திருச்சியில் நடைபெறும் தி. மு. கழக மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவிலும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பாராட்டு விழாவிலும் தங்களின் கிளைக் கழகச் சார்பில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

" இதுவரையிலும் மாநில மாநாட்டு நிதி அனுப்பாத கிளைக் கழகங்கள் 19-6-55 அன்று திருச்சி மாவட்டக் கழக பொருளாளர் அவர்களிடம் கொண்டுவந்து நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

சென்னை 39-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

18—6—55 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி. மு கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு, ஆக்க வேலைகள் ஆகியவை பற்றி ஆராயப்படும்.

S.P.T.
SANKARAN PROGRESSIVE TUTORIALS
TIRUCHI
SANKARAN PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P. O., TIRUCHIRAPALLI.
RE-OPENS : 10th JUNE 1955
S. S. L. C., INTER., B. A., etc.,
(All Parts & Groups)
★
The Greatest Living Poet
BHARTHI DASAN
will Teach you Tamil!
★
Mrs. JUDITH LOUIS, B.A. (HONS, Vice-Principal.
N. J. DEVADOSS, M.A., Principal.

திருமணம்

19-6-55 காலை 10 மணிக்கு, திருச்சி சிந்தாமணி சின்னையாப் பிள்ளை சத்திரத்தில், தோழர் தி. வீ. கணேசன்—தோழியர் நாகரேத்தினம் திருமணம் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் மு. கருணாநிதி, க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லை-வில்லாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் வேலாயுதம்பாளையம் வருகை

"20—6—55 அன்று (புகளூர்) வேலாயுதம்பாளையத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, வேலாயுதம்பாளையம் கிளையின் சார்பில் வரவேற்பும், மாநில மாநாட்டு நிதி அளிப்பும் நடைபெறும்.

" அன்று மாலை 4-30 மணிக்கு, மாபெரும் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும். சுற்றுவட்டாரக் கிளைக் கழகங்கள் சைக்கிள்களுடனும், கொடிகளுடனும் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, வேலாயுதம்பாளையம் கிளை தி. மு. கழகச் செயலாளர் தோழர் க. பெரியசாமி அறிவிக்கிறார்.

கரூர் வட்ட திராவிட நெசவுத் தொழிலாளர் கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

19—6—55 மாலை 5 மணிக்கு கரூர் பிரதட்சிண ரோடில் உள்ள அழகிரி சொற் பயிற்சிக் கழகத்தில், மேற்படி கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திருக்குறள் வகுப்பு

18—6—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், 'கல்வி' என்பது குறித்து திரு. மயிலை-சிவமுத்து, திருமதி இராஜேஸ்வரி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தமிழ் மன்ற விவாத அரங்கு தொடக்க விழா

19—6—55 காலை 10 மணிக்கு, பெங்களூர், தண்டு வீரப்பிள்ளைத் தெரு, முகம்மதலி மண்டபத்தில் திரு டி. திருமலை தலைமையில் நடைபெறும் இளைஞர்கள் பலர் விவாதம் புரிவர் தோழர்கள் பலர் கருத்துரை வழங்குவர்.

கழகக் கூட்டங்கள்

★

விருத்தாசலம்

18—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

பேசுபவர்:

சி. என். அண்ணாதுரை

★

அரக்கோணம்

மோசூர் ரோடில்

18—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். கே. கன்னையன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
என். ஏ. ரசீத்
வி. டி. சாமி
பெருஇளவெயினன்

★

குன்றத்தூர்

18—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: டி. கே. சிவகுமாரன்

பேசுவோர் :

டி. கே. சீனுவாசன்
டி. என். சம்பந்தம்
டி எம். கணபதி

★

திருமங்கலம்

பந்தடித் திடலில்

19—6—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு

பேசுபவர் :

ஈ. வெ. கி. சம்பத்

ரங்கைய நாயுடு இயற்கை எய்தினர்

சென்னை, ஜூன் 17—

சென்னை நகர சபையில் தொடர்ந்து 28 ஆண்டு காலமாக உறுப்பினராக இருந்தவரும், பழைய மந்திரி சபையில் அங்கம் வகித்தவருமான திரு. கத்தே ரங்கைய நாயுடு நேற்று மாலை, சென்னை, ஜார்ஜ்டவுன், பிடாரியார் கோயில் தெருவிலுள்ள தமது மூத்தமகன் இல்லத்தில், அவரது 84-வது வயதில் இயற்கையெய்தினர்.

இவர் 1869-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பிறந்தார்; உற்றதொரு நாட்டுப் பணியாளர்; 1923-ம் ஆண்டிற்குப் பின்னர் இவர் தமது நாட்டுப் பணியின் காரணமாக நெடுங்காலம் சிறை வாசம் அனுபவித்தவராவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.